# 451 அபராத நோட்டீஸ் வழங்கப்பட்டது

# மாநகர் மன்றத்தின் அதிரடி நடவடிக்கை

கோலாலம்பூர், மே 9-
இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை கோலாலம்பூர் மாநகர் மன்றமானது அதிரடி அமலாக்க நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தது. இத்தகைய பரிசோதனை காலகட்டத்தில் மொத்தம் 451 அபராத நோட்டிசுகளை விதித்தது.

மொத்தம் 13 பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்ற மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமது ஷாரிப் விவரித்தார்.

99 பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 22 வர்த்தக கட்டட தளங்கள் இழுத்து மூடப்பட்டது.

நேற்று டத்தாரான் மெர்டேகா சதுக்கத்தில் ஜாலோர் கெமிலாங் கொடியேற்றும் வைபவத்தை மேயர் டாக்டர் மைமூனா அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மாநகர் மன்றத்தின் மாதாந்திர முன்முயற்சி நடவடிக்கை இது மாநகர் மக்கள் மத்தியில் தேசப்பக்தியினை வளர்ப்பதற்கும் தேசிய அடையாளத்தை வலுப்படுத்தவும் இது உறுதுணையாக இருக்கும். மாநகர் மன்றத்தின் மகத்தான ஒருங்கிணைப்பு மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் மகா முக்கியம் என்று மேயர் எடுத்துரைத்தார்.



அப்போது கோலாலம்பூர் அதிரடி அமலாக்க படையில் ஈடுபட்ட 17 ஏஜென்சிகளுக்கு இவர் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

கோலாலம்பூர் அதிரடி படைப்பிரிவு என்பது ஓர் கூட்டான அமலாக்க பிரிவாகும். கூட்டரசு பிரதேசத்தில் அந்நிய வர்த்தகர்களின் ஆதிக்கம் பிச்சைக்காரர்கள், வீடற்றவர்கள் உட்பட பல்வேறு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு பரிகாரம் காணும் வண்ணம் இத்தகைய அமலாக்கப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டரசு பிரதேச இலாகா, கோலாலம்பூர் மாநகர் மன்றம், காவல்துறை, குடிநுழைவுத் துறை இலாமா, சமூக நலன் இலாகா, நிலம் மற்றும் சுரங்க இலாகா, தேசிய பாதுகாப்பு மன்றம், கூட்டரசு பிரதேச இஸ்லாமிய சமய மன்றம், தேசிய போதை ஒழிப்பு ஏஜென்சி சுங்க இலாகா, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மனிதவள இலாகா, சாலை போக்குவரத்து இலாகா, மலேசிய தொடர்புதுறை மற்றும் பல்லூடக ஆணையம் ஆகிய ஏஜென்சிகள் இதில் அடங்கும்.